2006 ஆகஸ்ட் 29] [கலைஞர் மு. கருணாநிதி]

காவல் துறை இன்னும் வேகமாக, இன்னும் அக்கறையோடு, ஆர்வத்தோடு செயல்பட்டு அந்தக் காரியத்தைச் செய்தவர்கள் யாராயினும், அவர்களைக் கைதுசெய்து குற்றவாளிக் கூண்டிலே ஏற்றக் கடமைப்பட்டிருக்கின்றது. அதற்கான தாக்கீது, அந்த வட்டாரத்திலே உள்ள காவல் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இங்கே இருக்கின்ற தலைமைக் காவலர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் இதுகுறித்து எச்சரித்துக் கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள் விஷமிகளாக இருக்க முடியாது. வேறு யாராகவாவது இருக்க வேண்டுமென்று திரு. சிவபுண்ணியம் சொன்னார்.

தந்தை பெரியாருக்கு இத்தகைய இழிவை ஏற்படுத்த வேண்டுமென்று கருதுகின்றவன் நிச்சயமாக நன்றியுள்ள தமிழனாக இருக்கமாட்டான். அதுமாத்திரம் அல்ல; அவன் பன்றிக் குணம் படைத்த ஒரு மனிதனாகத்தான் இருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பன்றிகள்தான் இந்த வேலையைச் செய்யும். அதை அவன் செய்திருக்கிறான். இருந்தாலும், பன்றிகளைத் தெருவிலே இப்படி நடமாடவிடக் கூடாது. காவல் துறை கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்; எடுக்க வேண்டும் என்று கூறி, இந்த அளவில் அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பொது விநியோகத்திற்கு மத்திய அரசின் கோதுமை ஒதுக்கீடு

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவிந்தசாமி, என்ன?

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக ration கடைகளிலே வழங்கப்பட்டுவந்த கோதுமையின் அளவு, படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருவதாகப் பல்வேறு பகுதிகளிலிருந்து செய்திகள் வருகின்றன. குறிப்பாக, நம்முடைய திருப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ration கடைகளில், கடந்த மூன்று மாதங்களாகப் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இந்த மாதம் ration கடைக்கு, கோதுமை ஒதுக்கீடே செய்யப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். மத்திய அரசிலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய கோதுமை, உரிய காலத்தில் கிடைக்கவில்லை என்றும் தகவல் தெரிவிக்கிறார்கள். அது உண்மைதானா? அப்படியிருக்குமானால்,

[திரு. சி. கோவிந்தசாமி] [2006 ஆகஸ்ட் 29

மத்திய அரசோடு மாநில அரசு உரிய முறையில் தொடர்பு கொண்டு, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய கோதுமையை உரிய காலத்திலே பெற்று, பொதுமக்களுக்கு ration விநியோகத்தின்மூலம் அது கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம், உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு, 8,000 மெட்ரிக் டன் கோதுமை தேவைப்படுகிறது. இப்போது 3,783 மெட்ரிக் டன் கோதுமைதான் வந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்பேரில் டெல்லிக்குச் சென்று, சம்பந்தப்பட்ட மாண்புமிகு மத்திய அமைச்சர் சரத் பவார் அவர்களைப் பார்த்துக் கடிதம் கொடுத்திருக்கிறோம். ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி, இங்கே முதலமைச்சர் அவர்களைச் சந்திக்கிறபொழுது, அவர்களும் அதை வலியுறுத்தியிருக்கிறார்கள். உடனே, இந்த மாதமே அனுப்புவதாகச் சொன்னார்கள். நேற்றையதினம்கூட நாங்கள் fax கொடுத்திருக்கிறோம். எனவே, கட்டாயம் வரும்; வந்தவுடனே இது நிறைவு செய்யப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

(இ) பாபநாசம் தாலுகா, ஆற்றில் விழுந்து இறந்த ஆதிதிராவிட மாணவியரின் குடும்பத்தினர்க்கு நிதியுதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைக்கண்ணு, என்ன? சொல்லுங்கள்.*

திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், பாபநாசம் தாலுகாவில், புள்ளபூதங்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் இரண்டு ஆதி திராவிட மாணவிகள், தனியாக tuition சென்றுவிட்டுத் திரும்பும்போது, அவர்கள் கரையோரத்தில் வந்தபோது, தவறி ஆற்றில் விழுந்து இறந்துவிட்டார்கள். 6 ஆம் தேதி இறந்தவர்களில், 6 ஆம் தேதியன்று ஒருவருடைய சடலத்தையும், 7 ஆம் தேதியன்று ஒருவருடைய சடலத்தையும் கைப்பற்றி, பிரேதப் பரிசோதனை செய்து, பெற்றோரிடத்தில்*